**செ. வெ. எண்: 580** **நாள்: 03.10.2011**

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (3.10.2011) தலைமைச் செயலகத்தில், மாநில மனித உரிமைகள் ஆணையத்திற்கு சென்னை, பி.எஸ். குமாரசாமி ராஜா சாலையில் 3 கோடியே 48 லட்சத்து 56 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய கூடுதல் அலுவலகக் கட்டடத்தை காணொலிக் காட்சி மூலமாக (Video Conferencing) திறந்து வைத்தார்கள்.

தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையம் சென்னையில் செயல்பட்டு வருகிறது. மாநில மனித உரிமைகள் ஆணையம் முழுமையாக செயல்படவும், ஆணையத்தில் ஆணையத் தலைவர், உறுப்பினர்கள், செயலர், பதிவாளர், கூடுதல் காவல்துறை துணைத் தலைவர், காவல்துறை கண்காணிப்பாளர், அரசு அலுவலர்கள் மற்றும் விசாரணைக்கு வருகை தரும் அரசு அலுவலர்கள், புகார்தாரர்கள் அவர்களுடன் சாட்சியம் அளிக்க வரும் நபர்கள், வழக்கறிஞர்கள் ஆகியோருக்கு அலுவலகத்தில் தேவைப்படும் இடவசதி மற்றும் நீதிமன்ற அறைகள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு மனித உரிமைகள் ஆணையத்துக்கென புதிய கூடுதல் கட்டடம் கட்ட முடிவெடுக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் தற்போது ஆணையம் இயங்கி வரும் சென்னை, பி.எஸ். குமாரசாமி ராஜா சாலையிலுள்ள வளாகத்திலேயே 3 கோடியே 48 லட்சத்து 56 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 2,034.31 சதுர மீட்டர் பரப்பளவில் மூன்று தளங்களாக கட்டப்பட்டது. பொதுப்பணித்துறையால் கட்டப்பட்டுள்ள இந்த கூடுதல் கட்டடத்தில் மூன்று நீதிமன்ற அறைகள், 200 பேர் அமரும் வசதி கொண்ட கூட்ட அரங்கு, நூலக அறை, ஆணையத் தலைவர், உறுப்பினர்கள், செயலர், பதிவாளர், கூடுதல் காவல்துறை தலைவர், காவல்துறை கண்காணிப்பாளர் ஆகியோருக்கான அறைகள் மற்றும் இதர அலுவலர்கள், பணியாளர்களுக்கு தேவையான இடவசதிகளுடன் உள்ளது. மேற்கண்ட மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் புதிய கூடுதல் அலுவலகக் கட்டடத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாக (Video Conferencing) திறந்து வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கே. பாஸ்கரன், திருமதி. ஜெயந்தி, இ.ஆ.ப. (ஓய்வு), தலைமைச் செயலாளர் திரு. தேபேந்திரநாத் சாரங்கி, இ.ஆ.ப., பொதுத்துறைச் செயலாளர் திரு. குமார் ஜெயந்த், இ.ஆ.ப. மற்றும் ஆணையத்தின் செயலாளர் திரு. D.விவேகானந்தன், இ.ஆ.ப. ஆகியோர் கலந்து கொண்டனர்.

* * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.
நாள்: 3.10.2011